ஸ்ரீ பகவத்பாதர்கள்

அருளிய

ஷட்பதீஸ்தோத்ரம்

षट्पदी-स्तोत्रम्

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி—50.

ஸ்ரீ பகவத்பாதாசாரியர்கள்
அருளிய

ஷட்பதீ ஸ்தோத்திரம்

षट्पदी स्तोत्रम्

ஆத்மவித்யாபூஷணம் வி. ஜகதீச்வர சாஸ்திரிகளின்
தமிழ் அநுவாதத்துடனும்

காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமி
அவர்களின் ஸ்ரீமுகத்துடனும் கூடியது.

ஸ்ரீ ராம ஜயம்
வைகாசி மீ 29உ

பிரசுரித்தவர்:
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1.

பதிப்புரிமை பெற்றது
முதற் பதிப்பு : 1963

விலை : 50 ந.பை.

லிபர்ட்டி அச்சகம், சென்னை - 1

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

श्रीः

श्रीमुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु श्रीपादैः क्रियते
नारायणस्मृतिः ॥

श्रीमूकपञ्चशती-मुकुन्दमाला-शिवपादादिकेशान्तवर्णनादीन् गरिष्ठान् ग्रन्थविशेषान् द्राविडचनुवादैः साकं प्रकाशयित्वा आस्तिकानां भक्तिभावमभिवर्धयद्भिः अस्मत्प्रियान्तेवासिभिः श्रीकामकोटिकोशस्थाननिर्वाहकैः अद्य श्रीभगवत्पादादिमहनीयैः सर्वजनोद्धारणार्थमनुगृहीताः भगवन्मूर्तिप्रभेदगुणवर्णनपटीयांसः भक्तिरससर्वस्वभूताः श्रीहनूमत्पञ्चरत्न-सुब्रह्मण्यभुजङ्गादिस्तोत्रतल्लजाः द्राविडचनुवादैः साकं प्रकाशयिष्यन्त इति विदित्वा परमां मुदं भजामः ।

आस्तिकाः एतानि स्तुतिरत्नानि सार्थानुसन्धानं पठन्तः शृण्वन्तश्च भगवद्भक्तिपरवशीकृतस्वान्ताः श्रीचन्द्रमौलीश्वरकृपापात्रीभूताः सकलभाग्यजातं प्राप्नुवन्त्वित्याशास्महे ।

यात्रास्थानम्
इलैयात्तकुटी
शुभकृच्छ्रावणशुद्धप्रथमा

नारायणस्मृतिः ।

ஸ்ரீ

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய
ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித
ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீபாதைঃ க்ரியதே நாராயண ஸ்ம்ருதிঃ ||

ஸ்ரீ மூகபஞ்சசதீ - முகுந்தமாலா - சிவபாதாதி கேசாந்தவர்ணனம் முதலிய அரும்பெரும் நூல்களைத் தமிழுரையுடன் வெளியிட்டு ஆஸ்திகர்களின் பக்தி உணர்ச்சியை வளர்க்கும் நம் பிரிய சிஷ்யரான ஸ்ரீ காமகோடி கோசஸ்தான நிர்வாஹகர்கள், இப்பொழுது ஸ்ரீ பகவத்பாதர்கள் முதலிய பெரியோர்கள் அருளிய பக்திமயமான ஸ்தோத்திரங்களைத் தமிழுரையுடன் வெளியிடுவதை அறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இந்த ஸ்தோத்திர ரத்தினங்களைப் பொருளறிந்து படித்தும் கேட்டும், பகவத் பக்தியில் திளைத்த உள்ளத்தினராய், ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரரின் கிருபைக்குப் பாத்திரராகி, ஸகல பாக்கியங்களையும் பெறுவார்களாக.

யாத்ராஸ்தானம்
இளையாத்தகுடி
சுபக்ருத் ச்ராவண சுத்தப்ரதமா } நாராயண ஸ்ம்ருதி.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள்

ஷட்பதீ ஸ்தோத்திரம்

षट्पदी स्तोत्रम्

இந்த ஷட்பதீ ஸ்தோத்திரம், ஸ்ரீ பகவத்பாதாசாரியர்கள் அநுக்கிரகித்தது. இந்த ஸ்தோத்திரத்தில் ஏழு ச்லோகங்கள் அடங்கியுள்ளன. ஏழாவது ச்லோகம், இதைப் படிப்பதன் பயனைக் கூறுகிறது.

ஷட்பதீ என்பதற்கு வண்டு என்பது பொருள். வண்டுக்கு ஆறு கால்கள் இருப்பதுபோல் இந்த ஸ்தோத்திரத்திலும் ஆறு ச்லோகங்கள் அடங்கியுள்ளன. ஆதலால் இந்த நூலுக்கு 'ஷட்பதீ ஸ்தோத்திரம்' என்று பெயர். வண்டு மகரந்தம் பொருந்திய தாமரை முதலிய புஷ்பங்களில் ரீங்காரத்துடன் சஞ்சரிப்பது வழக்கம். அதுபோலவே நம் அந்தக்கரணமான வண்டும் ஸ்ரீமந் நாராயணனின் திருவடித் தாமரைகளில் மகரந்தம் போல் உள்ள பக்தியில் ஈடுபட்டு ஸர்வ காலமும் அவரது நாமோச்சாரணத்துடன் சஞ்சரித்துக்கொண்டிருத்தல் அவசியம் என்பது உட்கருத்து.

மேலும் षड्भिः - உபக்ரமம், உபஸம்ஹாரம் முதலிய ஆறு லிங்கங்களால், पद्यते - அறியப்படுகிறார் என்ற வ்யுத்பத்தியால், ஷட்பதர் - பரமாத்மா. அவர் இந்த ஸ்துதியில் பிரதிபாதிக்கப்படுவதால் ஷட்பதீ என்று இதற்குப் பெயர் ஏற்பட்டது என்றும் கூறலாம். அல்லது, சரணாகதி மந்திரத்தில் ஆறு பதங்கள் உண்டு. இம் மந்திரத்தை नारायण, करुणामय, शरणम्, करवाणि, तावकौ, चरणौ என்ற ஆறு பதங்களால் சொல்வதனால் சரணாகதி என்ற அர்த்தமும்

ஷட்பதீ பதத்துக்குச் சொல்லலாம். இதைப் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரீ ஆசார்யர்கள் தமக்காக இந்த ஸ்தோத்திரத்தைச் செய்யவில்லை. சிவாவதாரமாயுள்ள ஸ்ரீ ஆசார்யர்களுக்கு இத்தகைய ஸ்தோத்திர பாராயணுதிகளால் அடையவேண்டிய பிரயோஜனம் ஏதும் இருப்பதற்கு நியாயமில்லை. நம் போன்ற ஜீவராசிகள் உய்யவேண்டியே இத்தகைய ஸ்தோத்திரங்களை ஸ்ரீ ஆசார்யர்கள் அருளியிருப்பதாகக் கொள்ள வேண்டும். மேலும், அத்வைத ப்ரஹ்ம நிஷ்டர்களாகிய ஸ்ரீ ஆசார்யர்கள் ஆப்தகாமர்களானபடியால், தமக்காக ஸ்தோத்திரம் எழுதுவது என்பது பொருத்தமற்றதாகும்.

"அத்வைத ஸித்தாந்தத்தில் ஸ்தோத்திரங்களுக்கு எவ்விதம் உபயோகம் ஏற்படும்?" என்ற கேள்வி எழலாம். அத்வைத ப்ரஹ்மஞானம் ஏற்பட்டபிறகு ஸ்தோத்திரங்களுக்கு உபயோகம் இல்லாவிட்டாலும், அந்த அத்வைத ப்ரஹ்ம ஞானம் உண்டாவதற்காக ஸ்தோத்திரங்கள் உபயோகப் படலாம். விவேகம், வைராக்கியம், சமதமாதிகள், மோக்ஷேச்சை, சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலியவை ஞானத்துக்கு ஸாதனங்களாக இருப்பது போலவே, ஸகுணதேவதையின் பக்தியும் ஞானத்துக்குச் சிறந்த ஸாதனமாகும். "मोक्षकारणसामग्र्यां भक्तिरेव गरीयसी" என்பது பகவத்பாதர்களின் திருவாக்கு.

ப்ரஹ்மஞானம் உண்டாவதற்கு முன்பு செய்துவந்த ஸகுண மூர்த்தி பக்தி, ஞானம் உண்டான பிறகும் தொடர்ந்துவரும் என்று பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் முதலிய கிரந்தங்களில் கூறியிருக்கிறது. ஞானிக்கும் பக்தி உண்டென்றால், அஞ்ஞானிக்குப் பக்தி அவசியம் என்பதில்

ஐயமில்லை. ஞானத்துக்கு முக்கிய ஸாதனமான பக்தி, இத்தகைய ஸ்தோத்திர பாராயணங்களால் நிச்சயமாக உண்டாகலாம். வேதாந்த ச்ரவணுதிகளில் அதிகாரமுள்ள ஜீவராசிகளுக்காகவே ஸ்ரீ ஆசார்யர்கள் சிவன், விஷ்ணு, அம்பாள், கணபதி, சுப்பிரமணியன், தக்ஷிணுமூர்த்தி, ராமன், கிருஷ்ணன், கங்கை, யமுனை முதலிய ஸகுண தேவதைகளைப் பற்றிய பற்பல ஸ்தோத்திரங்களை இயற்றியுள்ளார்கள். இவற்றையெல்லாம் தமக்காக அவர்கள் எழுதினதாகக் கொள்ளக் கூடாது.

அத்வைத ஸித்தாந்தத்தில் நிர்குண ப்ரஹ்மமே உண்மைப் பொருள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பினும், அஞ்ஞானத்தால் கற்பித நாமரூப உபாதிகளுடன் கூடிய ப்ரஹ்மத்தையும் அங்கீகரித்திருக்கிறுர்களே தவிர மறுக்கவில்லை. இதற்கு, "**स्यात्परमेश्वरस्यापि इच्छावशान्मायामयं रूपं साधकानुग्रहार्थम्**", "**निर्गुणमपि सद्ब्रह्म नामरूपगतैर्गुणैः सगुणमुपासनार्थं तत्रतत्रोपदिश्यते**", "**अप्रत्याख्यायैव कार्यप्रपञ्चं परिणामप्रक्रियां चाश्रयति सगुणेषूपासनेषु उपयोक्ष्यते**" என்ற பகவத்பாத வசனங்களும், "**उपासकानां कार्यार्थं ब्रह्मणो रूपकल्पना**" என்ற வசனமும் சிறந்த சான்ருகும். ஆனல் நாமரூப உபாதியும் அதன் சம்பந்தமும் அஞ்ஞானத்தால் கற்பிதமானதால், ஸோபாதிக ஸகுண ப்ரஹ்மத்தை வாஸ்தவமில்லை என்று சொல்லவேண்டி யிருக்கிறது. எனவே அத்வைத ஸித்தாந்தத்தில் சிவன் முதலிய தேவதைகளை 'இல்லை' என்று ஒருபோதும் மறுப்பதில்லை.

ஸ்ரீ ஆசார்யர்கள் செய்துள்ள ஸ்தோத்திரங்கள் எல்லாவற்றிலும் அத்வைதத்தின் உண்மை உள்ளடங்கியே இருக்கிறது. இந்த ஷட்பதீ ஸ்தோத்திரத்திலும் அந்த உண்மை அடங்கியிருப்பதை இதன் விரிவுரை மூலம் விளக்கிக் காட்ட

விரும்புகிறோம். இந்த ஸ்தோத்திரம், ஸ்ரீமந் நாராயணனைப் பற்றியது. ஸ்ரீ ஆசார்யர்களுக்கோ, அவர்களைப் பின்பற்று பவர்களுக்கோ சிவவிஷ்ணு பேதபுத்தி அறவே கிடையாது. அவரவர் தம் தம் பூர்வஜன்ம வாஸனுநுஸாரமாகச் சிவனையோ விஷ்ணுவையோ பஜிக்கலாம், துதிக்கலாம். முடிவில் அந்தத் தேவதையின் அநுக்கிரகத்தால் அத்வைத ப்ரஹ்மஞானமோ, அர்த்தகாமங்களோ அவசியம் ஏற்பட்டு விடும். இந்த அத்வைத உண்மையை அறிவிப்பதற்காகவே பஞ்சாயதன தேவதா பூஜை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைப் பிறகு விமர்சிப்போம்.

ஸ்ரீமத் ஆசார்யர்கள் இந்த ஸ்தோத்திரத்தின் முதலாவது ச்லோகத்தில் துர்க்குணங்களை அகற்றி, சமதமாதி ஸத்குணங்களை அநுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்கிருர்.

अविनयमपनय विष्णो दमय मनः शमय मृगतृष्णाम् ।
भूतदयां विस्तारय तारय संसारसागरतः ॥ १ ॥

विष्णो - ஹே நாராயணனே, **अविनयं** - வணக்கமின்மையை (முரட்டுத்தனத்தை), **अपनय** - போக்குவாயாக. **मनः** - மனத்தை, **दमय** - அடக்குவாயாக. **विषयमृगतृष्णां** - (சப்தாதி) விஷயங்களாகிய கானல்நீரை, **शमय** - நிவிருத்திப்பாயாக. **भूतदयां** - பிராணிகளிடத்தில் கருணையை, **विस्तारय** - விரிவுபடுத்துவாயாக. **संसारसागरतः** - சம்சாரமென்னும் பெருங்கடலிலிருந்து, **तारय** - கடக்கச் செய்வாயாக.

வணக்கமில்லாமை முதலிய துர்க்குணங்கள் ஒருவனிடம் இருந்தால், அவை அவனுக்கும் உலகுக்கும் கேடு விளைவிக்கும். எனவே துர்க்குணங்களை அகற்றித் திருந்திக் கொள்ள வேண்டும். இந்தத் திருத்தம் பகவதநுக்கிரகத்

தால்தான் ஏற்படும். இதேபோல் மன அடக்கம், விஷய வைராக்கியம், பிராணிகளிடத்தில் கருணை முதலிய நற்குணங்களும் இறைவனின் திருவருளினலன்றி மற்ற முயற்சிகளினல் ஸித்திக்க மாட்டா. ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம் ஆகிய இரண்டும் தோஷமற்று விளங்க வேண்டும் என்பது கருத்து. சம்சாரம் என்பது ஜன்ம மரணங்களேயாகும். இவை சமுத்திரம் போல வற்ருமலிருக்கின்றன. ஜன்ம மரண சமுத்திரத்தை வற்ற வைப்பதற்கும் பகவதநுக்கிரகம் இல்லாவிட்டால் முடியாது. பகவதநுக்கிரகத்தின் மூலமாக ஞானம் ஏற்பட்டால், இந்தச் சம்சார சமுத்திரம் வற்றிவிடும். பிறகு அஜராமரனுக (மூப்பும் இறப்புமற்று) விளங்கலாம்.

இந்த ச்லோகத்தில் ஸ்ரீ ஆசார்யர்கள், 'வணக்கமில்லாமலிருப்பதை அகற்ற வேண்டும்' என்று பகவானிடம் பிரார்த்திக்கிருர். வணக்கமில்லாதவர்கள் அஹங்காரிகளாக இருப்பார்கள். பணம், அழகு, படிப்பு, இளமை, பரிஜனங்கள் குலம் இவைகளால் அஹங்காரம் உண்டாகலாம். இதனல் மற்றவர்களிடம் ஸ்நேக பாவத்துடன் அஹங்காரிகளால் பழக முடியாது. இவ்விதமான அஹங்காரம் அனர்த்தங்களுக்கெல்லாம் மூலகாரணம். ஸ்ரீ ஆசார்யர்களே தாம் இயற்றிய பாஷ்யங்களில் ஆங்காங்கு "यथाप्रतिभानं व्याचक्ष्महे" என்று தமது அடக்கத்தை வெளியிட்டிருக்கிருர்கள். ஸௌந்தர்யலஹரி ஸ்தோத்திரத்திலும்,

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपलजललवैरर्घ्यरचना ।
स्वकीयैरम्भोभिस्सलिलनिधिसौहित्यकरणं
त्वदीयाभिर्वाग्भिस्तव जननि ! वाचां स्तुतिरियम् ॥

ஷ.—2

என்ற கடைசி ச்லோகத்தில், ஸர்வஜ்ஞர்களாயுள்ள ஸ்ரீ ஆசார்யர்கள், விநயத்தை வெளியிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அஸுர ஸம்பத்தைச் சேர்ந்தவை அஹங்காராதி துர்க்குணங்கள். இவை தேவர்களுக்கோ அஸுரர்களுக்கோ ராக்ஷஸர்களுக்கோ மனிதர்களுக்கோ எவருக்கு இருப்பினும் அவர்கள் அனர்த்தங்களுக்கு உள்ளாவார்கள். ராவணன், கம்ஸன், சிசுபாலன், துர்யோதனன் முதலியோரின் அழி வுக்குக் காரணம் இந்த அஹங்காரமே. துர்வாஸனை யால் ஏற்படும் அவிநயத்தை (அஹங்காரத்தை) வேரோடு அறுப்பதற்கு, பகவத் அநுக்கிரகந்தான் அவசியமாகும். மற்ற ஸாதனங்களால் அதை அழிக்க இயலாது என்பது திண்ணம்.

இதுபோலவே, மனத்தையும் இந்திரியங்களையும் வெளி விஷயங்களில் செல்லாமல் அடக்குவதற்குப் பகவதநுக்கிரகம் இல்லாவிட்டால் முடியாது. மனத்துக்கு இந்திரியவாயி லாக வெளியில் ஓடுவதே ஸ்வபாவம். புருஷப்பிரயத்தனத் தால் ஸ்வபாவத்தை மாற்றுவது மிகக் கடினம். பகவதநுக் கிரகம் இருந்தால், மனத்தையும் இந்திரியங்களையும் வெளியில் போகாமல் செய்துவிடலாம் என்பது "ईश्वर-प्रणिधानाद्वा" என்ற ஸ்ரீ பதஞ்ஜலி பகவானுடைய உபதேசத் தால் புலப்படுகிறது. மனம் வெளியில் செல்வதற்கு, அதிலுள்ள ரஜோகுண தமோகுணங்களே காரணம். ஈச்வர அநுக்கிரகத்தால் ரஜோகுண தமோகுணங்கள் இரண்டும் மனத்தை விட்டு அகன்றால், மனம் ஸத்துவகுண ப்ரதானமாய் ஆகிவிடும்.

இத்தகைய மனமே மோக்ஷத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. விஷயப்பற்றுள்ள மனம் பந்தத்துக்குக் காரணம். விஷயங்களில் தோஷதிருஷ்டியால் அந்தப் பற்றை

அறவே அழிக்க வேண்டும். துர்க்குணங்களும் விஷயப் பற்றும் நீங்கிய ஸாத்துவிக மனத்தில் பிராணிகளிடத்தில் கருணை உதிக்கும். கைம்மாறு கருதாமல், பிறர் துன்பத்தைத் தொலைப்பதில் ஆசையே தயை, கருணை என்று சொல்லப்படுகிறது. அஸுரஸ்வபாவமுள்ள க்ரூரர்களிடத்தில் தயை இருக்காது. தெய்வ ஸம்பத்துள்ளவர்களிடந்தான் தயை இருக்கும். அஸுர ஸம்பத்தை நீக்கி, தெய்வ ஸம்பத்தைப் பெறுவதும் பகவதநுக்கிரகத்தினுல்தான் முடியும். இவ்விஷயம் "तदेतत्त्रयं शिक्षेत् दमं दानं दयामिति" என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்து வாக்கியத்தாலும் விசதமாகக் கூறப்படுகிறது. ஆபஸ்தம்பர், கௌதமர் முதலிய மகரிஷிகளும் "दया सर्वभूतेषु" என்று தயாதி நற்குணங்கள் எல்லோருக்கும் மிக முக்கியமாகப் பின்பற்ற வேண்டியவை என்று கூறியிருக்கிறார்கள்.

"दैवी संपद्विमोक्षाय निबन्धायासुरी मता" என்ற பகவத்கீதை வசனப்பிரகாரம், ஸ்ரீ ஆசார்யர்கள் மோக்ஷப் பிரதிபந்தகமாயுள்ள அஸுரஸம்பத்தை நிவிருத்திக்கச் செய்து மோக்ஷஹேதுவாயுள்ள தெய்வ ஸம்பத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும்படி ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்திக்கிறார் என்பது உட்கருத்து. சம்சாரபந்த நிவிருத்தியே மோக்ஷபதத்தின் அர்த்தம். அதன் ஸமூல நிவிருத்திக்கு, தத்துவ ஞானமே சிறந்த சாதனம் என்பது ச்ருதி ஸ்மிருதி மதமாகும். ஈச்வர அநுக்கிரகத்துடன் கூடிய ச்ரவண மனனதி தியானங்களால் தத்துவஞானம் உண்டாகும். ஈச்வர கிருபைதான் தத்துவஞானம் உதிப்பதற்கு முக்கிய காரணம் என்ற விஷயத்தை, "यमेवैष वृणुते तेन लभ्यः", "मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥" என்ற ச்ருதி ஸ்மிருதிகள் வற்புறுத்துகின்றன. ஈச்வர அநுக்கிரகத்துக்கு

ஈச்வரனுடைய உபாஸனை நெருங்கிய காரணம். உபாஸனையைப் பக்தி என்றும், தியானம் என்றும், ஞானம் என்றும் ஆங்காங்கு வியவஹரிக்கிறார்கள். ஸ்ரீமத் பாகவதத்தில் இந்தப் பக்தியை,

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥
इति पुंसार्पिता विष्णौ भक्तिश्चेन्नवलक्षणा ।
क्रियते भगवत्यद्धा तन्मन्येऽधीतमुत्तमम् ॥

என்ற வசனத்தால் ஒன்பது விதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்பது விதமான இந்தப் பக்திகளுக்குள் பகவானுடைய சரணாரவிந்த நமஸ்கார ரூபமாயுள்ள பக்தியை இரண்டாவது ச்லோகத்தில் கருணாநிதியான ஸ்ரீ ஆசார்யர் பிரகாசப்படுத்துகிறார்.

दिव्यधुनीमकरन्दे परिमलपरिभोगसच्चिदानन्दे ।
श्रीपतिपदारविन्दे भवभयखेदच्छिदे वन्दे ॥ २ ॥

दिव्यधुनीमकरन्दे - தேவகங்கையாகிய மகரந்தத்தை (புஷ்ப ரஸத்தை) உடையவையும், **परिमलपरिभोगसच्चिदानन्दे** - நறுமண நிறைவாகிற ஸத்து சித்து ஆனந்தங்களை உடையவையும், அல்லது நறுமணத்தின் அநுபவத்தால் ஸச்சிதானந்தத்தை உண்டுபண்ணுகிறவையும், அல்லது நறுமணத்தின் அநுபவத்தால் (ஸத்) ஸாதுக்களான பக்தர்களுக்குச் சிதானந்தத்தை அளிப்பவையும், **भवभयखेदच्छिदे** - சம்சாரத்தால் உண்டாகும் பயத்தையும் துக்கத்தையும் ஸமூலநாசம் செய்கிறவையுமான, **श्रीपतिपदारविन्दे** - லக்ஷ்மீ-

காந்தனை ஸ்ரீநாராயணனுடைய பாதாரவிந்தங்களை, वन्दे - நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீமந் நாராயணனின் பாதங்களுக்குத் தாமரை மலரை உவமையாக இங்கே கூறுகிறார். தாமரைப் புஷ்பங்களில் மகரந்தம் நிறைந்திருக்கும். அதை வண்டுகள் மொய்க்கும். அதுபோல, பகவானுடைய சரணங்களில் தேவகங்கை விளங்குகிறது. திரிவிக்கிரமாவதார காலத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய உயரத்தூக்கிய இடதுகால் நகத்திலிருந்து கங்கை உண்டாயிற்று என்று புராணங்கள் வர்ணிக்கின்றன. விஷ்ணுபுராணத்தில்,

ऊर्ध्वोत्तरमृषिभ्यस्तु ध्रुवो यत्र व्यवस्थितः ।
एतद्विष्णुपदं दिव्यं तृतीयं व्योम्नि भास्वरम् ॥

ततः प्रवहति ब्रह्मन् सर्वपापहरा सरित् ।
गङ्गा देवाङ्गनाङ्गानामनुलेपनपिञ्जरा ॥

वामपादाम्बुजाङ्गुष्ठनखस्रोतोविनिर्गता ।
विष्णोर्बिभर्ति यां भक्त्या शिरसाहर्निशं ध्रुवम् ॥

என்ற வசனங்களால் இவ்விஷயம் புலனாகிறது.

ஸ்நானத்தாலும் பானத்தாலும் தரிசனத்தாலும் ஸ்மரணத்தாலும் ஜனங்களுடைய பாவங்களைக் கங்கை நாசம் செய்கிறது. இதனாலேயே घुनी என்ற பெயர் ஏற்பட்டது. கங்கைக்குப் பாவத்தைப் போக்கும் இந்தச் சக்தி விஷ்ணு பாதாங்குஷ்டத்திலிருந்து உற்பத்தி யடைந்ததனால்தான் கிடைத்தது. இக்காரணத்தால் விஷ்ணுபதி என்ற பெயர் கங்கைக்கு ஏற்பட்டது. விஷ்ணுபாதங்களிலிருந்து உண்டான கங்கைக்கே பாவத்தைப் போக்கும் சக்தி இருக்கு

மாஞல், ஸ்ரீநாராயண சரணங்களுக்குப் பாவத்தைப் போக்கும் சக்தி உண்டு என்பது பற்றிச் சொல்லவேண்டியதில்லை. கங்கையில் ஸ்நாஞதிகள் செய்வதஞல் பாவங்கள் அடியோடு நிவிருத்திப்பதில்லை. மறுபடியும் பாவம் உண்டாகலாம். ஸ்ரீநாராயணசரணத் தியானத்தாலோ, அடியோடு பாவங்கள் அற்றுவிடும்; மீண்டும் உண்டாகமாட்டா என்ற வித்தியாசம் கவனிக்கத்தக்கது.

தாமரை மலர்களில் நறுமணம் வீசும் என்பது உலகப் பிரசித்தம். அந்த மணம் ஜனங்களுடைய மனத்துக்கும் மூக்குக்கும் ஆனந்தத்தை அளிக்கும். பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் பூக்களில் நிறைந்த நறுமணத்தை நமஸ்கரிக்கும் காலத்தில் பக்தர்கள் ஆக்ராணம் செய்வார்களாஞல், ஸச்சிதானந்தமான பிரம்மத்தின் ஆனந்தமே ஆவிர்ப்பவிக்கும். ஸ்ரீமந் நாராயணனின் கரசரணுதி அவயவங்களெல்லாம் ஸச்சிதானந்த ஸ்வரூபங்களே யாகும். ஸத்துவகுணப்ரதான மாயோபாதிகமான ஸச்சிதானந்த ப்ரஹ்மமே, மஞேகரமான லக்ஷ்மீகாந்த சரீரமாக விளங்குகிறது. எனவே அவருடைய சரணங்களுக்கும் அத்தன்மையை வர்ணிப்பது மிகப் பொருத்தமேயாகும். தங்கமே குண்டலம் என்ற கார்யகாரியாபேத நியாயத்தால் ஸச்சிதானந்த ப்ரஹ்மத்துக்கும் பகவானின் மங்கள விக்கிரகத்துக்கும் பேதமில்லை. கட்டி நெய்க்கும் உருகின நெய்க்கும் எப்படி வித்தியாசம் கூற முடியாதோ, அங்ஙனமே ஸச்சிதானந்த ப்ரஹ்மத்துக்கும் திவ்யமங்கள குணங்களுடன் கூடிய ஸ்ரீநாராயணனுக்கும் வித்தியாசம் கிடையாது. இத்தகைய மகிமையை உணர்ந்தே, அமிருதத்துக்காகப் பாற்கடலைத் தேவாசுரர்கள் கடைந்த காலத்தில் ஆவிர்ப்பவித்த ஸ்ரீதேவி மற்றத் தேவர்களைத் திரஸ்கரித்துவிட்டு ஸ்ரீநாராயணனையே

வந்து அடைந்தாள். ஆகையால் ஸ்ரீபதி என்ற பெயர் உண்டாயிற்று. ஸ்ரிய:பதியான நாராயணனுடைய சரணங்களை நமஸ்காரம் செய்வதனுல் உண்டாகும் பிரயோஜனம் என்னவென்ருல், சம்சாரத்தில் அநுபவிக்கப்படும் பய துக்காதிகள் அறவே அழிவதேயாகும்.

ध्यायन् स्तुवन् नमस्यंश्च यजमानस्तमेव च ।
लोकाध्यक्षं स्तुवन् नित्यं सर्वदु:खातिगो भवेत् ॥

என்ற பீஷ்மரின் வாக்கியம் இதற்குப் பிரமாணம். பகவத் பக்தியை, ஸாதனபக்தி ஸாத்யபக்தி என்று இரு விதமாகச் சாஸ்திரங்களில் பிரித்திருக்கிறது. இவ்விரு வகையான பக்தியை, பேதபக்தி அபேதபக்தி என்றும் கூறுவதுண்டு. ச்ரவணகீர்த்தனதிகள் தனக்கு அந்நியனுக ஈச்வரன் இருப்பதாகப் பேதபுத்தியுடன் கூடிச் செய்ய வேண்டியவை யாதலால், ஸாதனபக்தியாகும். ச்ரவண கீர்த்தன நமஸ்காராதி பக்தியைச் செய்தால்தான் அபேதபக்தி உண்டாகும். உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் பகவதர்ப்பணம் செய்வதே ஆத்மார்ப்பணம் என்ற அபேதபக்தி என்று கூறப்படும். இதையே சரணுகதி என்று கூறுவதுண்டு. **अनन्याश्चिन्तयन्तो मां** என்ற கீதாவசனத்தால் இந்தப் பக்தி குறிப்பிடப்படுகிறது. அபேத பக்தியில் ஆவிர்ப்பவிக்கும் ஆனந்தத்தைத்தான் "**रसो वै सः**" என்ற ச்ருதியில் கூறியிருப்பதாகச் சொல்லி, ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி ஸ்வாமிகள் 'பக்தி ஸ்வத: புருஷார்த்தம்' என்று கூறுகிருர். ஸகாம பக்தி, நிஷ்காம பக்தி என்றும் பக்தியை விபாகம் செய்யலாம். இஹபர சுகங்களையும், அனர்த்த நிவிருத்தியையும் கருதிச் செய்யும் பக்தி ஸகாம பக்தியாகும். மேற்கண்ட பிரயோஜனம் எதையும் கருதாமல் பகவானுடைய திருப்திக்

காகச் செய்யும் பக்தி நிஷ்காம பக்தியாகும். நிஷ்காம பக்தி, சித்தசுத்தி வாயிலாகத் தத்துவஞானத்தை உண்டுபண்ணுகிறது. ஸம்ஸாரபய துக்க நிவிருத்திக்காக நமஸ்காரத்தை வர்ணித்திருப்பதனுல், நிஷ்காம பக்தியையே ஸ்ரீ ஆசார்யர்கள் இந்த ச்லோகத்தில் சொல்லியிருப்பதாக அறிய வேண்டும்.

முன் ச்லோகத்தில் பக்தியும் உபாஸனமும் ஒன்று என்று கூறினேம். காயத்தாலும் வாக்காலும் பகவானுக்குச் சேவை செய்வது பக்தி எனப் பெறுகிறது. பிரீதி விசுவாஸத்துடன் தைலதாரைபோல் பகவானையேஎப்போதும் ஸ்மரணம் செய்தல் உபாஸனமாகும். "प्रीतिपूर्वानुसन्धानं भक्तिरित्यभिधीयते" என்பது இதற்குப் பிரமாணமாகும். இத்தகைய பக்தியையும் உபாஸனத்தையும் பண்ணுவதற்கு, பகவானுக்கும் பக்தனுக்கும், உபாஸகனுக்கும் உபாஸ்யனை பகவானுக்கும் பேதம் இருப்பதாக அங்கீகரிக்க வேண்டும். ஜீவன் உபாஸகன்; பரமாத்மா உபாஸ்யன். ஜீவ பரமாத்மாக்களுக்குப் பேதமில்லை என்றும், பேதத்தை ஒப்புக்கொள்வது அனர்த்தகரமாகும் என்றும் ச்ருதி ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கிறது. ஜீவபரமாத்ம பேதத்தை அங்கீகரித்தால் ச்ருதி ஸ்மிருதி விரோதம் ஸம்பவிக்கும். ஜீவ பரமாத்ம பேதத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் பரமாத்மாவினிடம் பக்தியையோ உபாஸனத்தையோ ஸேவையையோ செய்ய முடியாது.

உபநிஷத்துக்களிலும் ஸ்மிருதிகளிலும் ஜீவ பரமாத்ம அபேதமே கூறியிருக்கிறது. "तत्त्वमसि", "अनेन जीवेनाऽऽत्मनाऽनुप्रविश्य", "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्", "योऽसावसौ पुरुषस्सोऽहमस्मि", "नेह नानास्ति किंचन" என்ற வசனங்கள், ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதமே உண்டு; பேதம்

இல்லை என்று வற்புறுத்துகின்றன. ஸ்ரீ ஆசார்யர்களும் இந்த உபநிஷத்துக்களின் அத்வைத தாத்பரியத்தைத் தம் கிரந்தங்களில் ஆங்காங்கே தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறார்கள்.

'இங்ஙனமிருக்கையில், எங்ஙனம் ஸ்ரீ ஆசார்யர்கள் பூர்வ ச்லோகத்தில் "ஸ்ரீமந் நாராயணனைச் சம்சாரபய நிவிருத்திக்காக நமஸ்கரிக்கிறேன்" என்று கூறியிருப்பது பொருத்தமாகும்?' என்ற சங்கைக்குச் சமாதானம் இந்த ச்லோகத்தில் கூறுகிறார்—

सत्यपि भेदापगमे नाथ तवाहं न मामकीनस्त्वम् ।
सामुद्रो हि तरंगः क्वचन समुद्रो न तारंगः ॥ ३ ॥

नाथ - ஈச்வரனே, **भेदापगमे सत्यपि** - (நம் இருவருக்கும்) பேதம் இல்லாமலிருப்பினும், **अहम्** - நான், **तव** - உன்னைச் சேர்ந்தவன். **त्वम्** - நீ, **मामकीनो न** - என்னைச் சேர்ந்தவனல்ல. **हि** - ஏனெனில், **तरंगः** - அலை, **सामुद्रः** - கடலைச் சேர்ந்ததேயாகும். **क्वचन** - எக்காலத்திலும், **समुद्रः** - கடல், **तारंगो न** - அலையைச் சேர்ந்ததாகாது.

ச்ருதி ஸ்மிருதிகளில் ஜீவபரமாத்மாபேதம் வற்புறுத்திச் சொல்லியிருப்பது வாஸ்தவம். ஜீவபரமாத்ம அபேத உண்மை அறியப்படாத அஜ்ஞான நிலையில், "ஜீவன் வேறு, பரமாத்மா வேறு" என்ற பேதத் தோற்றம் மறுக்க முடியாததாகும். ஜீவன் பரமாத்மா ஆகிய இரண்டுக்கும் அபேதம் பேதம் இரண்டையும் அங்கீகரிப்பது பொருத்தமன்று என்ற சங்கை நிகழலாம். பேதாபேதங்களை அவ்விருவருக்கும் பரமார்த்த ஸத்யமாகக் கூறினால், பொருத்தமில்லை என்று சொல்லலாம். அவ்விதம் நாம் சொல்ல

வில்லை. ஆனால் அபேதம் பரமார்த்தம் என்றும், பேதம் பொய், வியவஹார ஸத்யம் என்றும் கூறுவதால் முன் கூறிய விரோதம் சரியல்ல. அடுத்ததாக, 'அபேதம் பொய் என்றும், பேதம் பரமார்த்த ஸத்யம் என்றும் ஏன் சொல்லக்கூடாது?' என்று சங்கிக்கலாம். இந்தச் சங்கை சரியல்ல. ச்ருதி ஸ்மிருதிகளுக்கு ஜீவபரமாத்ம அபேதத்தில் தாத்பர்யமே தவிர, ஜீவபரமாத்ம பேதத்தில் இல்லை. தெரியாத விஷயத்தைச் சொல்வதுதான் சாஸ்திரமாகும். ஜீவ பரமாத்மாபேதந்தான் பிரத்தியக்ஷத்தாலும் யுக்தியாலும் அறிந்துகொள்ள முடியாத விஷயம். ஜீவபரமாத்ம பேதமோ என்றால், பிரத்தியக்ஷத்தாலும் யுக்தியாலும் அறிந்துகொள்ளப்பட்டதேயாகும். அறிந்த விஷயத்தையே மீண்டும் அறிவிப்பது சாஸ்திரமாகாது. எனவே அபேதம் பரமார்த்த ஸத்யம். பேதம் வியவஹார தசையில் ஸத்யமென்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அஞ்ஞானத்தால் தோன்றிய பேதம் பரமார்த்த ஸத்யமாகாது. நேத்திர தோஷத்தால் தோன்றும் இரண்டு சந்திரன் பரமார்த்தமாகுமா? அஞ்ஞான தோஷத்தினால் ஜீவன், ஜகத், ஈச்வரன் என்ற பேதம் ஏற்பட்டுள்ளது என்பது ச்ருதிகளில் நிர்ணயமாகியிருக்கிறது.

'ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் வியவஹார தசையிலாவது எதற்காகப் பேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்?' என்றால், அஞ்ஞானிகளாக இருக்கும் ஜனங்கள், கர்மா, பக்தி, உபாஸனம் முதலிய சாதனங்களை அநுஷ்டித்துப் படிப்படியாக அபேத ஞானத்தை அடைந்து உய்வதற்காகவே பேதத்தை ஒப்புக்கொள்கிறோம். பேத ஞானம் அற்றுப்போய், ஜீவபரமாத்மாபேத ஞானம் பெற்ற ஞானிகளுக்கும், சிறிது காலம் பேதத் தோற்றம் தொடர்ந்து

வரும். இந்த நிலையே ஜீவன்முக்த ஸ்திதி என்று கூறு வது. அபேத ஞானிகளாகிய ஜீவன்முக்தர்களும், பேதம் தோன்றும்போது பகவானிடம் பக்தி செலுத்துவார்கள். இவ்விஷயத்தை, "ज्ञानी च भरतर्षभ", "आत्मारामाश्च मुनयो निर्ग्रन्था अप्युरुक्रमे। कुर्वन्त्यहैतुकीं भक्तिं इत्थंभूतगुणो हरिः॥" என்ற பிரமாணங்கள் அறிவிக்கின்றன.

பகவானிடம் சரணுகதி செய்து, அவரது அநுக் கிரகத்தால் ஜீவன்முக்தர்கள் ஞானமடைந்தபடியால் அந்த வாஸனை அவர்களைப் பேதம் தோன்றும்போது பகவத் பக்தி ரஸாஸ்வாதத்தில் ஈடுபடச் செய்யும். ஸ்ரீ ஆசார்யரும் இந்த ஜீவன்முக்த நிலையில் இருந்துகொண்டுதான் இந்த ச்லோகத்தைக் கூறுகிருர். ஞானிகளுக்குத் தோன்றும் ஜீவேச்வர பேதமும் கற்பிதமேயாம். பூர்வவாஸனையால் சிறிது காலம் தோன்றுகிறது. அக்காலத்திலும் அவர்கள் தம்மைப் பரமாத்மாவின் ஓர் அம்சமாக அநுஸந்தானம் செய் வார்களேயன்றி, தமது அம்சமாகப் பரமாத்மாவை அநு ஸந்தானம் பண்ணமாட்டார்கள். ஸ்ரீ பகவான் கீதையில், "ममैवांशो जीवलोके जीवभूतस्सनातनः" என்று பரமாத்மா வின் அம்சமாகத்தான் ஜீவனைக் கூறுகிருர். இதை "तवाहम्" என்று ஸ்ரீ ஆசார்யர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'பேதம் தோன்றும்போது பரமாத்மாவின் அம்சம் நான் என்று தோன்றுமாஞல், "என்னுடைய அம்சம் பர மாத்மா" என்று துல்ய நியாயத்தால் அவசியம் தோன்ற வேண்டுமே?' என்ற சம்சயத்தை, 'न मामकीनस्त्वम्" என்ற வசனத்தால் போக்குகிருர். இதன் கருத்தாவது—உலகத் திலோ சாஸ்திரத்திலோ ஜீவனுடைய அம்சமாகப் பரமாத் மாவை வியவஹரிப்பதில்லை. சிறிய உபாதியுடன் கூடிய

ஜீவனைப் பெரிய உபாதியுடன் கூடிய பரமாத்மாவின் அம்ச மாகக் கூறுவது பொருத்தமில்லை அல்லவா? உபாதிகளின் ஏற்றத் தாழ்வினால்தான் ஜீவபரமாத்மாக்கள் இருவருக்கும் பேதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காகக் கடலை உபமான மாக இங்கே கூறியிருக்கிறது. கடலின் அம்சம் அலை என்றுதான் எல்லோரும் சொல்கிறார்களேயன்றி, அலையின் அம்சமாகக் கடலைச் சொல்வதில்லை. கடலின் பரிணாமமே அலையாதலால், கடலும் அலையும் ஒன்று என்று கூறு வதானால் அம்ச வியவஹாரமே கிடையாது. அதுபோல ஜீவ னும் பரமாத்மாவும் ஒன்று என்று சொல்லும் பக்ஷத்தில் அம்சாம்சிபாவ வியவஹாரமே சொல்வதற்கில்லை. இந்த விஷயத்தை, "देहबुद्ध्या तु दासोऽहं जीवबुद्ध्या त्वदंशकः। आत्मबुद्ध्या त्वमेवाहमिति मे निश्चिता मतिः॥ தேகபுத்தியால் உனக்கு நான் தாஸன். ஜீவபுத்தியால் உனது அம்சம் நான். ஆத்மபுத்தியாலோ, நீயே நான் என்று திட நிச்சயம் என்னுடையது" என்ற வசனம் கூறுகிறது.

ஜீவன் பரமாத்மாவின் அம்சம் என்பது கற்பிதமே; வாஸ்தவாம்சமாகாது. அவயவத்துடன் கூடிய வஸ்துவுக்கு அம்சமுண்டு. பரமாத்மாவோ நிரவயவர். அத்தகையவருக்கு உண்மை அம்சம் சொல்ல முடியாது. ஆகையால் கற்பித பேதத்தை அவலம்பித்துத்தான் இந்த ச்லோகத்தில் அம்ச மென்று கூறியிருப்பதாக அறியவேண்டும். ஜீவ பரமாத் மாக்களின் கற்பித பேதத்தை அவலம்பித்துத்தான், பந்தம் முக்தி, குரு சிஷ்யன், சுகம் துக்கம், ஜன்ம மரணம் முதலிய வியவஹாரமெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஜீவனுக்கும் பர மாத்மாவுக்கும் உண்மையில் பேதம் இருப்பதாகச் சொல் வோமானால், பரமாத்மாவைக் காட்டிலும் அந்நியமாயுள்ள குடம் முதலிய வஸ்துக்கள் ஜடமாக இருப்பதுபோல் பர

மாத்மாவுக்கு அந்நியனுயுள்ள ஜீவனையும் ஜடனுக அங்கீகரிக்க நேரிடும். இது போல் ஜீவ பின்னனுகிய பரமாத்மாவும் ஜடமென்று ஒப்புக்கொள்ள நேரிடும். இரண்டும் ஜடமாக இருந்தால் ஞானத்தை அடையச் சாதனங்களை அநுஷ்டிப்பவன் இல்லாமற் போவான். அவ்விருவருக்கும் பேதம் பொய் என்று அங்கீகரித்து, கற்பித பேதத்தை அவலம்பித்தால், முன் கூறிய பந்தமுக்தி முதலிய வியவஸ்தை எல்லாம் பொருந்தும். மேலும், பேதத்தை ஸத்யமென்று ஒப்புக்கொள்வதானுல், "नात्र काचन भिदास्ति"," मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति", "उदरमन्तरं कुरुते" என்ற அநேக ச்ருதிகளில் பேதத்தை நிந்தித்திருப்பது விரோதிக்கும்.

அத்வைத ஸித்தாந்தத்தில் பேதம் பொய், அபேதம் ஸத்யம் என்ற பேதாபேதவாதம், "भोक्त्रापत्तेरविभागश्चेत् स्यात् लोकवत्" என்ற அதிகரணத்தில், ஸ்ரீ வியாஸாசாரியர்கள் வியாவஹாரிக பரிணமவாதத்தை அவலம்பித்து ஸித்தாந்தம் பண்ணியிருக்கிருர்கள். பேதமும் அபேதமும் ஸத்யம் என்ற பேதாபேதவாதமே நிராகரிக்கத் தக்கது. ஸத்ய பேதாபேதவாதம் இரு வகை. ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் எப்போதுமே பேதம் அபேதம் என்ற இரண்டும் உண்டு என்பது ஒரு வகை. முக்தியடையும் வரையில் பேதம், பிறகு அபேதம்; இரண்டும் ஸத்யம் என்பது மற்றொரு வகை. இரண்டாவது வகை தாந்த்ரிகர்களுடையது. "आमुक्तेर्भेद एव स्याज्जीवस्य च परस्य च। मुक्तस्य तु न भेदोऽस्ति भेदहेतोरभावतः॥" என்பது தாந்த்ரிகர்கள் கூறும் பிரமாண வசனமாகும்.

இந்த இரு வகையான பேதாபேதவாதத்தை ஸ்ரீ ஆசார்யர்கள் பிரமாண பூர்வகமாகக் கண்டனம் செய்துள்ளார்கள்.

எனவே இந்த ச்லோகத்தில் அபேதத்தையும் பேதத்தையும் ஸத்யமாகக் கருதி ஸ்ரீ ஆசார்யர்கள் வர்ணித்திருக்கவே முடியாது. பேதம் இருந்தால்தான் பக்தி உபாஸனம் செய்ய முடியும்; ஆகையால் வியாவஹாரிக ஜீவபரமாத்ம பேதத்தையே இங்கு ஸ்ரீ ஆசார்யர்கள் கூறியிருப்பதாகக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ வியாஸ பகவான் இயற்றிய ப்ரஹ்மஸூத்திரம், ஸமன்வயம், அவிரோதம், ஸாதனம், பிரயோஜனம் என்ற பெயருள்ள நான்கு அத்தியாயங்கள் அடங்கியதாகும். இந்த நான்கு அத்தியாயங்களின் அர்த்தத்தை, இந்த ஷட்பதீ ஸ்தோத்திரத்தில் அடங்கியுள்ள ஆறு ச்லோகங்களில் ஸூசனையாக ஸ்ரீ ஆசார்யர்கள் அறிவித்திருக்கிறார்கள். இவற்றுள் முதலாவது ச்லோகத்தில் ஸமன்வயாத்யாயத்தின் தாத்பர்யம் "विष्णो" என்ற பதத்தால் ஸூசிப்பிக்கப்பெறுகிறது. இரண்டாவது ச்லோகத்தால் ஸாதனாத்யாயத்தின் கருத்து வெளியிட்டதாக அறியவேண்டும். இரண்டாவது ச்லோகத்தில் பகவானுடைய சரணங்களில் நமஸ்காரம் செய்வதென்ற உத்தமமான பக்தி வடிவமான ஞானசாதனத்தை வருணித்திருப்பதனால் உபலக்ஷண மரியாதையாக எல்லா ஸாதனங்களும் அதில் கூறியிருப்பதாகக் கருதல் வேண்டும். எனவே ஸாதனாத்யாயத்தின் தாத்பர்யம் சுருக்கமாக அதில் தெரிவித்திருக்கிறது. மூன்றாவது ச்லோகத்தில் அவிரோதாத்யாயத்தின் அர்த்தம் அடங்கியிருக்கிறது. மீதி மூன்று ச்லோகங்களால் பிரயோஜனாத்யாயத்தின் அர்த்தம் ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதாக அறிதல் வேண்டும். எனவே சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்தின் தாத்பர்யமே இந்த ஷட்பதீ ஸ்தோத்திரத்தில் அடங்கியிருக்கிறது. இந்தக் கருத்தை உணர்ந்து இதைப் பாரா

யணம் செய்தால் சாரீரக மீமாம்ஸா சாஸ்திரார்த்தவிசாரம் செய்ததாக ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

முந்திய ச்லோகத்தில், "नाथ ! तवाहं न मामकीनस्त्वम्" என்று பகவானுடைய சரணுகதியை வர்ணித்தாயிற்று. மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணங்களையும் பகவானிடம் அர்ப்பணம் செய்து அவனையே கதி என்ற நம்பிக்கையுடன் ஆச்ரயித்துள்ள பக்தோத்தமர்களுக்குத்தான் ஞானேதயம் ஏற்பட்டு, அஞ்ஞான இருள் அகன்று, பரமபுருஷார்த்தமான மோக்ஷம் அநாயாசமாக ஆவிர்ப்பவிக்கும்; மற்றவர்களுக்கு அல்ல. எனவே முமுக்ஷுக்களாயுள்ள பக்தர்கள் பகவானையே அனவரதம் பஜனம் செய்யவேண்டும். பகவானின் அநுக்கிரகத்தால்தான் இன்பம், பேரின்பம், எல்லாம் அனைவருக்கும் உண்டாகவேண்டும். அநேக பக்தர்கள் பகவானுடைய அநுக்கிரகத்துக்குப் பாத்திரர்களாக இருந்து அவரால் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் பக்த பரிபாலன காரியத்தை ஸ்மரித்துக்கொண்டு பகவானை இந்த நான்காவது ச்லோகத்தில் துதிக்கிறார்.

மேலும், "तवाहम्" என்ற வசனத்தால் பகவானுடைய அநுக்கிரகத்தினல் ஆவிர்ப்பவித்த ஞானத்தால் அஞ்ஞான நிவிருத்தி ரூப மோக்ஷம் உண்டாகும் என்று கூறியிருப்பது, சரியல்ல. பகவத்பக்தியையும் ஞானத்தையும் அங்கீகரிக்காத சிலர் கர்மாக்களாலேயே மோக்ஷம் ஏற்படலாம் என்று கூறுகிறார்கள். அதற்குப் பிரமாணமாக, 'अक्षय्यं ह वै चातुर्मास्ययाजिनः सुकृतं भवति', 'अपाम सोमममृता अभूम', 'कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः' என்ற ச்ருதி ஸ்மிருதி வசனங்களை உதாரணமாகக் காண்பிக்கிறார்கள். ஆகையால் கர்மாக்களாலோ, அல்லது உபாஸனத்தாலோ, ஞானத்துடன் கூடிய கர்மாக்களாலோ மோக்ஷம்

ஸித்திக்கிறது" என்ற பூர்வமீமாம்ஸகர்களின் அபிப்பிராயத்தைக் கண்டனம் பண்ணி, பகவத் ப்ரஸாதத்தால் ஏற்பட்ட அந்தப் பகவத் ஸாக்ஷாத்காரத்தால்தான் மோக்ஷம் ஏற்படும் என்று இந்த நான்காவது ச்லோகத்தில் கூறுகிறார்.

उद्धृतनग नगभिदनुज दनुजकुलामित्र मित्रशशिदृष्टे ।
दृष्टे भवति प्रभवति न भवति किं भवतिरस्कारः ॥ ४ ॥

उद्धृतनग! - கோவர்த்தன கிரியை உயரத் தூக்கினவனே! அல்லது, யமளார்ஜுனங்களான இரண்டு மரங்களைச் சாபத்திலிருந்து விடுவித்தவனே! அல்லது, மந்தர பர்வதத்தை உயரத் தூக்கினவனே! **नगभिदनुज!**-இந்திரனுக்குத் தம்பியான உபேந்திரனாக அவதரித்தவனே! **दनुजकुलामित्र!** - அசுர வம்சத்துக்குச் சத்துருவானவனே! **मित्रशशिदृष्टे!** - சூரியன் சந்திரன் இருவரையும் கண்களாக உடையவனே! **प्रभवति** - பிரபுவான, **भवति** - நீ, **दृष्टे** - அறியப்பட்டால், **भवतिरस्कारः** - சம்சார பந்த நாசம், **किं न भवति**-உண்டாகாமல் இருப்பதேது?

தனது வேள்வியை நடத்தவொட்டாமல் தடுத்துக் கெடுத்த ஸ்ரீகிருஷ்ணனிடம் கோபம் கொண்ட தேவேந்திரன் ஏவிய பெருங் காற்று மழையால் பெருந்துன்பத்துக்கு உள்ளான கோகுலவாசிகளாகிய தன் பக்தர்களைக் காப்பாற்றும்பொருட்டு ஏழு நாட்கள் வரை கோவர்த்தன மலையைச் சுண்டுவிரலால் குடையாகப் பிடித்துக்கொண்டு, அதனடியில் அந்தப் பக்தர்களை வசிக்கச் செய்து ஸ்ரீகிருஷ்ணன் காப்பாற்றினார் என்பது ஸ்ரீமத் பாகவதத்தில் விரிவாகக் கூறியிருக்கிறது.

तस्मान्मच्छरणं गोष्ठं मन्नाथं मत्परिग्रहम् ।
गोपाये स्वात्मयोगेन सोऽयं मे व्रत आहितः ॥
इत्युक्त्वैकेन हस्तेन कृत्वा गोवर्द्धनाचलम् ।
दधार लीलया कृष्णः छत्राकमिव बालकः ॥

"**नग**" என்ற பதத்துக்கு விருக்ஷம் என்ற அர்த்தமும் உண்டு. நாரதமுனிவரின் சாபத்தால், குபேரனின் குமாரர்களான நளகூபரன் மணிக்ரீவன் என்ற இரு குஹ்யகர்கள் இரண்டு அர்ஜுனவிருக்ஷரூபர்களாகக் கோகுலத்தில் வசித்து வந்தார்கள். அவர்களுடைய சாபத்தை ஸ்ரீகிருஷ்ணன் போக்கடித்தார் என்பதும் ஸ்ரீபாகவதத்தில் பிரசித்தமானது.

बालेन निष्कर्षयताऽन्वगुलूखलं तत्,
दामोदरेण तरसोत्कलिताङ्घ्रिबन्धौ ।
निष्पेततुः परमविक्रमितातिवेप-
स्कन्धप्रवालविटपौ कृतचण्डशब्दौ ॥

தேவர்களும் அசுரர்களும், அமிருதத்துக்காக க்ஷீரசாகரத்தைக் கடைந்த காலத்தில், மத்தாக அமர்த்திய மந்தர பர்வதம் சமுத்திரத்துக்குள் மூழ்கிவிட்டது. அதைக் கண்டு தேவர்களும் அசுரர்களும் துக்கப்பட்டார்கள். அந்தச் சமயத்தில், பகவான் தம் பக்தர்களாகிய தேவர்களைக் காப்பாற்றுவதற்காகக் கூர்ம ரூபமாக (ஆமை வடிவத்தில்) அவதரித்து மந்தர பர்வதத்தை உயரத் தூக்கினார்.

विलोक्य विघ्नेशविधिं तदेश्वरो दुरन्तवीर्योऽवितथाभिसन्धिः ।
कृत्वा वपुः काच्छपमद्भुतं महत् प्रविश्य तोयं गिरिमुज्जहार ॥

என்பது ஸ்ரீமத் பாகவத வசனம். பலி சக்கரவர்த்தியின் கர்வத்தைப் போக்கி, தேவதைகளைக் காப்பாற்றுவதற்காகத் தேவர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி, பகவான் அதிதி தேவியினிடத்தில் வாமன ரூபமாக அவதரித்து, தேவேந்திரனுக்குத் தம்பியாக விளங்கினார் என்பது புராணப் பிரசித்த விஷயமாகும். மூவுலகையும் பலிசக்கரவர்த்தியினிடமிருந்து கிரஹித்துக்கொண்டு அதைத் தம் பிராதாவான இந்திரனிடம் சேர்ப்பித்தார் என்பது ஸ்ரீ பாகவதத்திலிருந்து புலனாகிறது.

एवं बलेर्महीं राजन् भिक्षित्वा वामनो हरिः ।
ददौ भ्रात्रे महेन्द्राय त्रिदिवं यत् परैर्हृतम् ॥

அசுரர்கள், தானவர்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களைப் பகவான் நாசம் செய்வதும் பக்தர்களை ரக்ஷிப்பதற்காகத்தான். இது அவதாரத்தின் பிரயோஜனமாகும். 'भिदशाशिदृष्टे' என்ற ஸம்போதனத்தால் விராட்ரூபத்தை வருணிக்கிறார். பகவான் ஸ்வர்க்கம் முதல், பாதாளம் வரையிலுள்ள உலகங்கள் ரூபமாக விளங்குகிறார் என்று ச்ருதி ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கிறது. **'अग्निर्मूर्धा चक्षुषी चन्द्रसूर्यौ', 'यस्याग्निरास्यं द्यौर्मूर्धा खं नाभिश्चरणौ क्षितिः। सूर्यश्चक्षुर्दिशः श्रोत्रे तस्मै लोकात्मने नमः॥', 'भूः पादौ यस्य खं चोदरमसुरनिलश्चन्द्रसूर्यौ च नेत्रे कर्णावाशाः'** என்று ச்ருதி ஸ்மிருதிகள் விராட்ரூபத்தை வர்ணித்திருக்கின்றன.

தேவர்களைக் காப்பாற்றுவதற்காகப் பல அவதாரங்களை எடுத்து, அவதார திவ்ய லீலைகளைச் செய்துள்ள பகவானைப் பற்பல ஸம்போதனங்களால் ஆஹ்வானம் செய்துவிட்டு, "இத்தகைய உன்னை ஸாக்ஷாத்காரம் செய்தால்

சம்சார பந்தம் நீங்காமல் இருக்குமா? கட்டாயம் நீங்கியே தீரும்'' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் உத்தரார்த்தத்தினல் கூறுகிருர்.

இதனல் பூர்வமீமாம்ஸகர்களின் ஆசங்கைக்கும் உத்தரம் கிடைத்துவிட்டது. அதாவது:—'तमेव विदित्वा', 'भिद्यते हृदयग्रन्थिः', 'ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः', 'ज्ञानादेव तु कैवल्यम्' என்ற ச்ருதிகள், 'ஞானந்தான் மோக்ஷஸாதனம்; கர்மாவோ, உபாஸனமோ அன்று' என்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கின்றன. எனவே, 'अक्षय्यं ह वै', 'अपाम सोमम्' என்ற ச்ருதிகளில் உள்ள அமிருதம் என்ற பதம், முக்கிய மோக்ஷத்தைத் தெரிவிக்கவில்லை. பிரளய பரியந்தம் ஸ்திரமான ஸ்தானத்தை அந்தப் பதம் அறிவிப்பதாக அங்கீகரிக்க வேண்டும். 'कर्मणैव' என்ற ச்லோகத்திலுள்ள 'ஸம்ஸித்தி' என்ற பதத்துக்குச் சித்தசுத்தி என்று அர்த்தமே தவிர, மோக்ஷம் என்று அர்த்தமில்லை. மோக்ஷம் என்று அர்த்தம் கூறினலும் அதற்குக் கர்மா, ஞானம் வாயிலாகக் காரணம் என்றே அந்த ச்லோகத்தின் கருத்து. கர்மா ஸாக்ஷாத்தாக மோக்ஷத்துக்கு ஹேது என்பது அந்த ச்லோகத்தின் கருத்து அல்ல. ஆகவே ஞானமே அஞ்ஞான நிவிருத்திரூப மோக்ஷத்துக்குக் காரணமாகும். இதையே 'दृष्टे भवति' என்று ஸ்ரீ ஆசார்யர் குறிப்பிடுகிருர்.

ஆனல் இங்கு ஒரு சங்கை — பகவானை ஸாக்ஷாத்கரித்தால், ஜீவர்களின் சம்சார பந்தம் எங்ஙனம் நிவிருத்திக்கும்? அந்நியனுடைய ஞானத்தால், அந்நியனுடைய அஞ்ஞான பந்தம் நிவிருத்திப்பதாக உலகத்தில் கண்டதில்லை. ஞானமும் அஞ்ஞானமும் ஒரே இடத்தில் இருந்தால் தான் ஞானம் அஞ்ஞானத்தைப் போக்கும் என்பது உலகத்தில் கண்ட உண்மை. எனவே பரமாத்மாவை அறிந்தால்,

ஜீவ பந்தம் நிவிருத்திப்பதாக இங்கே கூறியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை என்ற சந்தேகம் எழுகிறது.

இதற்குச் சமாதானமாவது—ஜீவ ப்ரஹ்ம பேத வாதத்தில் இந்தச் சங்கை எழலாம். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்ற அத்வைத ஸித்தாந்தத்தில் இந்தச் சங்கைக்கு இடமில்லை. ச்ருதிஸ்மிருதிகளில், ஜீவப்ரஹ்மா பேதத்தை அறிவிக்கிற வசனங்கள் பற்பல இருக்கின்றன. எனவே ஜீவபாவம் கற்பிதமென்றே ஏற்படுகிறது. அதிஷ்டான ஞானத்தால், ஆரோபிதம் நிவிருத்திக்கும். கிளிஞ்சில் என்ற ஞானத்தால் வெள்ளி என்ற பிரமம் அழிந்துவிடுகிறதன்றோ? அதுபோலவே பரமாத்ம ஞானத்தால், ஆரோபித ஜீவ பாவம் நிவிருத்திக்கிறது. இதுவே மோக்ஷம். இந்த விஷயத்தை, 'த்ருஷ்டே பவதி' என்ற பகுதியால் ஸ்ரீ ஆசார்யர்கள் நன்கு உணர்த்துகிறார். ஞானத்தால் அஞ்ஞான நிவிருத்திரூப மோக்ஷ ப்ரயோஜனத்தை இந்த ச்லோகத்தில் கூறியிருப்பதனால், ப்ரஹ்ம ஸூத்திரத்தின் நான்காவதான பிரயோஜனத்யாயத்தின் ஸாராம்சம் வர்ணித்திருப்பதாக அறிய வேண்டும்.

இந்திரியங்களாலும் மனத்தாலும் அறியமுடியாதவரான பகவான், பக்தர்கள் கண்டு ஆனந்திக்கும்படியாக, அநேக அவதாரங்களை எடுத்துக் கொள்கிறார். அந்த அவதாரங்களால், பூலோகவாசிகளாகிய எல்லா ஜீவராசிகளும் க்ஷேமம் அடைகிறார்கள். அத்தகைய பகவானை, சம்சார பந்தம் நீங்குவதற்காக இந்த ஐந்தாவது ச்லோகத்தில் துதிக்கிறார்.

मत्स्यादिभिरवतारैः अवतारवताऽवताखिलां वसुधाम् ।
परमेश्वर परिपाल्यो भवता भवतापभीतोऽहम् ॥ ५ ॥

परमेश्वर! - பரமேச்வரனே! मत्स्यादिभिः - மீன் முதலிய, अवतारैः - அவதாரங்களால், अवतारवता - அவதரித்துள்ளவனும். अखिलाम् - எல்லா, वसुधाम् - பூமண்டலத்தையும், अवता - காப்பாற்றுகிற, भवता - உன்னால், भवताप-भीतोऽहम् - சம்சார தாபத்திலிருந்து பயந்த நான், परिपाल्यः- ரக்ஷிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

ஹிரண்யகர்ப்பர் முதலிய தேவர்களுக்கெல்லாம் ஸ்வாமியாக இருப்பதனால் பகவானைப் 'பரமேச்வரனே' என்று அழைக்கிறார். புலியைக் கண்டு பயப்படுவதுபோல் சம்சார தாபத்திலிருந்து மிகவும் பயத்தை அடைந்த என்னை நீ பரிபாலனம் செய்வாயாக. நிர்மல ஸத்துவகுணம் பொருந்திய உனக்கு என்னைப் போன்ற சரணாகத பக்தர்களைக் காப்பாற்றுவது தர்மமன்றோ? இவ்வுலகம் அனைத்தையும் காப்பாற்றுகிற உனக்கு, என்னைக் காப்பாற்றுவது சிரமமில்லாத காரியம். ராவணன், கம்ஸன், சிசுபாலன், முரன், நரகன் முதலிய அசுர ஸ்வபாவமுள்ளவர்களையும் ஸம்ஹாரம் செய்து பரமானந்தமான உன் ஸ்வரூபத்தை அடையச் செய்த கருணாநிதியான நீ, பக்தர்களை ரக்ஷிப்பதில் என்ன ஸம்சயம்? மகாபாரதம், பாகவதம் முதலிய கிரந்தங்களில் ராக்ஷஸாதிகளுக்கும் ஸாயுஜ்யம் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது.

ये ये हताश्चक्रधरेण दैत्याः त्रैलोक्यनाथेन जनार्दनेन ।
ते ते गता विष्णुपुरीं नरेन्द्र! क्रोधोऽपि देवस्य वरेण तुल्यः ॥

நீ துஷ்டநிக்ரஹ சிஷ்டரக்ஷணத்துக்காகவே அந்த அந்தக் காலத்துக்கேற்ப மத்ஸ்யம், கூர்மம், வராகம் முதலிய பல அவதாரங்களை எடுத்து, ஹிரண்யாக்ஷன் முதலிய அசுரர் பலரை உன் ஸாயுஜ்யம் அடையச் செய்திருக்கிறாய்.

புராண ஆகமங்களில் மிகப் பிரசித்தமான நினது மகிமையை எங்ஙனம் வாயால் வர்ணிக்க முடியும்? "अनेन पुत्रेणाहं पुत्री" என்று பிரயோகிப்பதுபோல், 'अवतारैरवतारवता' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் பிரயோகம் பண்ணியிருப்பது அறியத் தக்கது. சம்சாரதாபம் நீங்குவதற்கும், இவ்வுலக வாழ்க்கையில் துன்பமின்றிச் சுகமாக இருப்பதற்கும் பகவானுடைய அநுக்கிரகமே முக்கிய காரணம். எனவே அவதாரங்களில் ஏதாவது ஓர் அவதாரத்தைச் சரணாகதி செய்து எல்லோரும் க்ஷேமம் அடையவேண்டும் என்று, இந்த ச்லோகத்தால் ஸ்ரீ ஆசார்யர்கள் நமக்கு உபதேசிப்பதாக உணர வேண்டும்.

தம்மிடம் அன்புகொண்ட பக்தர்களைப் பகவான் ஒரு போதும் கைவிட மாட்டார் என்பதைச் சரித்திர வாயிலாக முன்பு கூறினோம். எந்த அளவுக்குப் பக்தி செலுத்துகிறோமோ அந்த அளவுக்குப் பகவானும் நம்மிடம் அன்பு பாராட்டுகிறார். பகவானிடம் அன்புக்காக அன்பு செலுத்துவது உலகத்தில் மிக அரிது. பக்தர்களில் பல வகை உண்டு. நீங்காத வியாதி முதலியவை ஏற்பட்டால், அவை நீங்குவதற்காகப் பகவானைப் பிரார்த்தித்துக் கொள்பவர் சிலர். பணத்துக்காகப் பஜிப்பவர் வேறு சிலர். மோக்ஷத்துக்காகப் பக்தி செலுத்துபவர் மற்றும் சிலர். முக்தி பெற்றவரும் பகவானைக் காரணமின்றிப் பஜிப்பார்கள். இந்தப் பக்தர்கள் எல்லாருக்கும் அவரவர்களின் பக்தியின் தராதரமறிந்து பகவான் பயனை அளிக்கிறார். இதனாலேயே பகவானுக்குப் 'பக்தவத்ஸலன்' என்றும், 'ஆபத்பாந்தவன்' என்றும் பெயர் ஏற்பட்டது.

அவதாரங்களுக்குள் மனுஷ்யாவதாரம் உயர்ந்தது. ஞானம், ஐச்வரியம், வீர்யம், தேஜஸ் முதலிய எல்லாச் சக்தி

களும் மனுஷ்யாவதாரத்தில் பரிபூர்த்தியாக அமைந்துள்ளன. எனவே ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் மிகவும் சிரேஷ்டமானவை. ஸ்ரீகிருஷ்ணன் அவதார தினம் முதற்கொண்டே தம்மிடமுள்ள அதிவிசித்திர அனந்த சக்திகளை உலகுக்குக் காட்டியிருக்கிறார். பிரம்மாதி தேவர்களாலும் ஸ்ரீகிருஷ்ணனின் மாயாசக்தியை உணர முடியவில்லை என்றால், நாம் அதை எவ்வண்ணம் அறிய இயலும்?

சிவாவதாரமான ஸ்ரீ ஆசார்யர்கள் கல்யாண குணங்களுடன் விளங்குகிற பகவானைத் தமது இருதயத்தில் அமர்த்தி, பக்தியுடன் தியானம் செய்து, அதனால் ஆவிர்ப்பவித்த ஆனந்தப் பிரவாகத்தால், பகவத் குணங்களை இந்த ஆறாவது ச்லோகத்தில் கானம் பண்ணுகிறார். ஞானிகள் தமது அநுபவத்தையும் ஆனந்தத்தையும் வெளிப்படுத்துவதற்காகக் கானம் செய்வதுண்டு. தைத்திரியோபநிஷத்தில் "हावु, हावु, हावु" என்று ப்ரஹ்மவத்கானம் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸதாசிவப்ரஹ்மேந்திரர்களும் இதுமாதிரி ஆனந்த கானம் செய்திருக்கிறார்கள். அதுபோலவே ஸ்ரீ ஆசார்யர்களும் இங்கே கானம் செய்கிறார். தவிர, கலியுகத்தில் பாவங்களைப் போக்கிக்கொண்டு, புருஷார்த்தங்களைப் பெறுவதற்குப் பகவந்நாம ஸங்கீர்த்தனம் ஒன்றுதான் உபாயம். வேறு உபாயம் கிடையாது. இவ்விஷயம் பல இடங்களில் விரிவாகச் சொல்லியிருக்கிறது.

रामेति वर्णद्वयमादरेण सदा स्मरन् मुक्तिमुपैति जन्तुः ।
कलौ युगे कल्मषमानसानां अन्यत्र धर्मे खलु नाधिकारः ॥

एवं निर्विद्यमानानां इच्छतामकुतोभयम् ।
योगिनां नृप ! निर्णीतं हरेर्नामानुकीर्तनम् ॥

அநாயாஸமாகக் கலியுகத்தில் எல்லாப் புருஷார்த்தங்களும் நாமகீர்த்தனத்தால் உண்டாவதாலேயே பெரியோர் இந்தக் கலியைப் புகழ்ந்து பேசுகிறார்கள்.

कलिं सभाजयन्त्यार्याः गुणज्ञास्सारभागिनः ।
यत्र संकीर्तनेनैव सर्वस्यार्थो हि लभ्यते ॥

எனவே ஸ்ரீ ஆசார்யர்கள் பகவந்நாம கீர்த்தனம் அனைவருக்கும் அவசியம் என்பதைத் தெரிவிப்பதற்காக, "यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः" என்ற நியாயத்தைப் பின்பற்றித் தாமே பகவந்நாம கீர்த்தனம் பண்ணுகிறார் :—

दामोदर! गुणमन्दिर! सुन्दरवदनारविन्द! गोविन्द! ।
भवजलधिमथनमन्दर! परमं दरमपनय त्वं मे ॥ ६ ॥

दामोदर! - வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்டவனே! **गुणमन्दिर!** – குணங்களுக்கு இருப்பிடமானவனே! **सुन्दरवदनारविन्द!** - தாமரை மலர்போல் அழகான முகமுடையவனே! **गोविन्द!** - கோக்களை அடைந்தவனே, அல்லது அறிந்தவனே, அல்லது பூமியைத் தூக்கிக்கொண்டு வந்தவனே! அல்லது வேதவாக்கியங்களால் அறிவிக்கப்படுகின்றவனே! **भवजलधिमथनमन्दर!** - சம்சாரமாகிய கடலை அழித்துக் கலக்குவதில் மந்தரம் என்னும் மலைபோன்றவனே, **त्वम्** - நீ, **मे** - எனது, **परमं** - மேலான (தாங்க முடியாத), **दरम्** - பயத்தை, **अपनय** - போக்கக் கடவாயாக.

ஒரு சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் அபராதம் செய்ததுபோல அபிநயம் பண்ணவே, யசோதா தேவி குழந்தையின் உண்மை ஸ்வரூபம் தெரியாமல் அவனைக் கயிற்றால் வயிற்றில் கட்டினாள். இதனால் கிருஷ்ணனுக்குத் தாமோதரன் என்ற பெயர் ஏற்பட்டது.

दाम्ना बद्धो यतो मध्ये गोपीभिः परिगीयते ।
ततश्च दामोदरतां स ययौ दामबन्धनात् ॥

तं मत्वाऽऽत्मजमव्यक्तं मर्त्यलिंगमधोक्षजम् ।
गोपिकोलूखले दाम्ना बबन्ध प्राकृतं यथा ॥

உண்மையில் '**दाम**' என்பது மாயையைக் குறிக்கிறது. '**उदर**' என்ற பதம் கிருஷ்ணனின் உண்மை ஸ்வரூபத்தைக் குறிக்கிறது. கிருஷ்ணனின் வாஸ்தவ ஸ்வரூபம் ப்ரஹ்மம். எனவே தாமோதர பதத்திற்கு, கிருஷ்ண பரமாத்ம ஸ்வரூபத்தில் ஜகத்துக்குக் காரணமான மாயை கற்பிதமாய் ஆச்ரயித்திருக்கிறதென்று தாத்பர்யம். ஸ்ரீகிருஷ்ணன் யசோதைக்குத் தம்மை ஆச்ரயித்திருக்கிற மாயாசக்தியால் தமக்குள்ளே இவ்வுலகத்தை யெல்லாம் காண்பித்திருப்பது பொருத்தமாகிறது. அல்லது உலகங்களை உதரத்தில் வைத்துக்கொண்டிருப்பதால் தாமோதரன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். "**दामानि लोकनामानि स्थापयत्युद-रान्तरे**" என்ற வசனம் இந்த அர்த்தத்தை விளக்குகிறது.

இங்கு ஒரு சங்கை — ஸ்ரீகிருஷ்ணனின் லீலைகளெல்லாம் பக்தர்கள் தியானம் செய்து மோக்ஷம் பெறுவதற்கே என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். கயிற்றால் கட்டுண்ட கிருஷ்ணனைத் தியானம் செய்து எங்ஙனம் மோக்ஷம் அடைவது? மோக்ஷம் என்பது பந்தநிவிருத்தி. பந்தமுள்ளவன் பந்தத்தைப் போக்க முடியாதவன் அன்றோ? உலகத்தில் சிறையில் அடைபட்டவன் அந்நியனைச் சிறையிலிருந்து விடுவிப்பது கண்டதில்லையே. கட்டுண்டவன்போல் தோன்றினலும் உண்மையில் கிருஷ்ணன் ப்ரஹ்மஸ்வரூபமானதால் அந்நியனின் பந்தத்தைப் போக்கலாம் என்றால்,

எல்லா ஜீவர்களுமே பக்தர்போல் தோன்றினாலும் உண்மையில் ப்ரஹ்மஸ்வரூபமானதால் அவர்களும் அந்நியனின் பந்தத்தைப் போக்கலாம் என்று சொல்ல நேரிடும் என்று சந்தேகம்.

இதற்குச் சமாதானமாவது — யசோதா தேவிக்கு இரங்கிக் கயிற்றால் கிருஷ்ணன் கட்டுண்டவர்போல இருந்தாரே தவிர, அவளாலும் அவரைக் கட்ட முடியவில்லை என்பது ஸ்ரீமத் பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தவிர, ஸ்ரீகிருஷ்ணன் மாயையை ஸ்வவசம் செய்தவன்; சுத்தஸத்வகுணம் பொருந்தினவன். இத்தகைய கிருஷ்ணன் யசோதைக்குக் கட்டுண்டு இருந்தாலும் அந்நியர்களான அன்பர்களின் பந்தத்தைப் போக்குவதில் ஸமர்த்தன் என்பதில் ஐயமில்லை. மற்ற ஜீவர்களோ மாயைக்கு வசமானவர்கள்; ரஜோகுண தமோகுணம் மேலிட்டவர்கள். எனவே அவர்களுக்கு அந்நிய ஜீவர்களின் பந்தத்தைப் போக்கச் சக்தி இல்லை என்பது வெட்டவெளிச்சமான விஷயம். ஆகவே ஜீவர்களையும் கிருஷ்ணனையும் சமானமாக நினைப்பதற்கு இடம் இல்லை. இந்தக் கருத்தை உணர்த்துவதற்காகவே "गुणमन्दिर" என்ற பதம் இங்கே பிரயோகிக்கப்பட்டுள்ளது. பிரம்மாதி தேவர்களாலும் அளவிட முடியாததும் அறிய முடியாததுமான ஸர்வஜ்ஞத்வம் ஸர்வேச்வரத்வம் காருணிகத்வம் முதலிய அனந்த குணங்களுக்கு இருப்பிடம் பகவான் என்று கூறப்பட்டிருக்கிறது.

"பகவானுடைய குணங்களையும் தோஷங்களையும் எண்ண முடியாது. குணங்களுக்கு அந்தம் (முடிவு) இல்லாததனால் எண்ணிக்கைக்கு அவை அடங்காதவை. தோஷங்களே பகவானிடம் இல்லாததனால் தோஷங்களும் எண்ணிக்

கைக்கு அடங்காதவை'' என்ற கருத்துள்ள ஒரு ச்லோகம் கூறுவதுண்டு.

संख्यातुं नैव शक्यन्ते गुणा दोषाश्च शार्ङ्गिणः ।
आनन्त्यात् प्रथमो भागस्त्वभावादेव पश्चिमः ॥

அத்வைத ஸித்தாந்தத்திலும் உபாஸ்யமான ஸகுண மூர்த்தி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அடிக்கடி நாம் தெரிவித்திருக்கிறோம்.

सुन्दरवदनारविन्द என்று பகவானுடைய முகத்தின் அழகு வர்ணிக்கப்பட்டுள்ளது. எப்போதும் பகவானுடைய முகம் ஸௌந்தரமாகவே இருக்கும் என்பது கருத்து. மற்ற வர்களின் முகமண்டலமோ சில சமயம் அழகாகவும், சில காலம் அழகில்லாமலும் இருக்கும். அகத்தில் ஆனந்தம் இருந்தால், முகம் மலர்ந்தும், துக்கம் இருந்தால் வாடியும் இருக்கும். பகவானுக்குத் துக்கம் சிறிதேனும் இல்லாமை யாலும், எல்லையற்ற ஆனந்தம் அகத்தில் இருப்பதாலும் எப்போதும் பகவானுடைய முகம் ஸௌந்தரமாகவே இருக்கும். உபநிஷத்துக்களிலும், "ब्रह्मविद इव सौम्य ते मुखं भाति— ப்ரஹ்ம வித்துக்களின் முகம்போல் உன் முகம் எப்போதும் மலர்ந்து ஸௌந்தரமாக விளங்குகிறது'' என்று சொல்லி யிருப்பது கவனிக்கத் தக்கது. பகவானுடைய முகத்தின் ஸௌந்தர்யம் பாகவத ராமாயணாதிகளில் வெகுவாக வரு ணிக்கப்பட்டிருக்கிறது.

कुटिलकुन्तलं श्रीमुखं च ते जड उदीक्षतां पक्ष्मकृद्दृशाम् ॥
चन्द्रकान्ताननं राममतीव प्रियदर्शनम् ।

"गोविन्द" என்ற நாமம் எல்லா அபீஷ்டங்களையும் அளிக்கக் கூடிய மஹாமந்த்ரமாகும். அச்யுத அனந்த

கோவிந்த என்ற மூன்று நாமங்களையும் நாமத்ரய மஹா மந்த்ரம் என்று அழைக்கிறோம். கோவிந்த நாமத்தின் மஹிமை பல கிரந்தங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கோவிந்த நாமம், மூன்று வேதங்களின் ஸாரம் என்பதை,

ऋग्वेदं मा यजुस्तात मा साम पठ किंचन ।
गोविन्देति हरेर्नाम गेयं गायस्व नित्यशः ॥

என்ற பிரமாணம் தெளிவுபடுத்துகிறது.

ஸம்ஸாரக் கடலை வற்றவைப்பதற்குப் பகவான் மந்த்ர பர்வதமாக விளங்குவதாக ஸ்ரீ ஆசார்யர்கள் இங்கே கூறுகிறார். இத்தகைய பகவானிடம், தமது ஸம்ஸார பயத்தைப் போக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். பயம் என்ற பதத்திற்கு அஞ்ஞானம் என்று அர்த்தம். ஸ்ரீ ஆசார்யர்கள் "अभयं वै जनक प्राप्तोऽसि" என்ற வாக்கியத்துக்கு வியாக்கியானம் செய்யும் இடத்தில் பயசப்தத்திற்கு அஞ்ஞானம் அர்த்தம் என்று சொல்லியிருக்கிறார். "भवजलधिमथन-मन्दर" என்பதால், பிறப்பு இறப்பு பயத்தையும், दरमपनय என்பதால் பிறப்புக்கும் இறப்புக்கும் மூலகாரணமான அஞ்ஞானத்தையும் அகற்றும்படி பிரார்த்திப்பதாக அறிக.

இங்ஙனம் ஆறு ச்லோகங்களால் ஸ்ரீ ஆசாரியர்கள்,

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥

என்ற ச்லோகத்தில் சொன்னபடி, பகவானை நமஸ்காராதி ரூபமான பக்தியை அவலம்பித்து ஸ்தோத்ரம் செய்துவிட்டு, ஆத்ம நிவேதந வடிவமான சரணாகதியை இந்த ஏழாவது ச்லோகத்தில் கூறி ஸ்தோத்திரத்தைப் பூர்த்தி செய்கிறார் :—

नारायण करुणामय शरणं करवाणि तावकौ चरणौ।
इति षट्पदी मदीये वदनसरोजे सदा वसतु ॥ ७ ॥

नारायण - நாராயணனே! करुणामय - கருணைவடிவான வனே! तावकौ-நினது, चरणौ - இரு பாதங்களை, शरणं - ஆச்ரயமாக, ரக்ஷகராக, करवाणि - செய்கிறேன். इति-இந்த விதமான, षट्पदी-ஷட்பதீ ஸ்தோத்திரம், அல்லது நாராயண (1), கருணாமய (2), சரணம் (3), கரவாணி (4), தாவகௌ (5), சரணௌ (6), இந்த ஆறு பதங்களின் ஸமுதாயம், मदीये - என்னுடைய, वदनसरोजे - முகாரவிந்தத்தில், सदा - எப்பொழுதும், वसतु - வசிக்கவேண்டும்.

நாராயணபதத்திற்குப் புராணாதிகளில் அநேக அர்த்தம் சொல்லியிருக்கிறது. नारं - ஜீவர்களின் கூட்டம், अयनं - ஆச்ரயம் எவருக்கோ அவர் நாராயணன். ஜீவர்களிடம் அந்தர்யாமியாக விளங்குபவன் என்று அர்த்தம். அல்லது नारस्य ஜீவசமுதாயத்துக்கு अयनं பிரவிருத்தி எவரிடத்தி லிருந்து ஏற்படுகிறதோ அவர் நாராயணன். ஜீவர்களைப் பிரவர்த்திக்கச் செய்பவன் என்று பொருள். नारं - ஜீவசமுதாயத்தை अयसे - அறிகிறாய். ஆகையால் நாராயணன். ஸர்வஜ்ஞன் என்று பொருள். नारं - ஜலம், अयनं - இருப்பிடமாக உள்ளவன் நாராயணன். பிரளயத்தில் ஆலிலையில் சயனம் பண்ணுகிறவர் என்று பொருள். பகவானிடம் உள்ள காருண்ய குணமே பக்தர்கள் சரணாகதி செய்வதற்கு உதவியாக இருக்கிறது. உடல், பொருள், ஆவி மூன்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதே சரணாகதி எனப்படும். சரணமென்று வாயால் மட்டும் உச்சரிப்பது சரணாகதி ஆகாது. மாட்டை விற்றவன் விற்ற மாட்டைப்பற்றி எப்படிக் கவலைப்படமாட்டாரோ, அதுபோல் ஆத்மஸமர்ப்

பணம் பண்ணினவன், தனது ஜீவனத்தைப் பற்றியோ, வேறு எந்தக் காரியத்தைப் பற்றியோ முயற்சி இழந்தவனாக இருத்தல் வேண்டும். யோகக்ஷேமத்திற்காக முயற்சியோடு சரணாகதி செய்வது சரியல்ல. அது சரணாகதி அல்ல. முயற்சியற்ற சரணாகத பக்தனை ரக்ஷிப்பதற்குப் பகவான் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார். பக்தனுக்கு முயற்சி இருந்தால் பகவான் தம் முயற்சியைக் கைவிடுகிறார். எனவே சரணாகதி என்பது எல்லோராலும் சுலபமாகச் செய்யக் கூடியதல்ல. பக்தன் செய்கிற சரணாகதியை ஏற்றுக் கொள்வதற்குத்தான் காருண்ய குணம் பகவானிடம் இருக்கிறது. காருண்யம் இல்லையானால், பகவானிடம் மற்றக் குணங்களெல்லாம் பிரயோஜனமற்றவையாகவே முடியும்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில்தான் சரணாகதி என்று இல்லை. அத்வைத ஸம்பிரதாயத்திலும் சரணாகதி உண்டு. எல்லோருக்கும் சரணாகதி பொதுவான தர்மமாகும். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் த்வயமந்த்ரம் என்று கூறுவது வழக்கம். அந்த மந்த்ரம் ஆறு பதங்களுடன் கூடினது. த்வயமந்த்ரத்தில் அடங்கிய ஆறு பதம் கொண்ட மந்த்ரத்தையே இங்கு ஸ்ரீ ஆசார்யர்கள் नारायण (१) करुणामय (२) शरणं (३) करवाणि (४) तावकौ (५) चरणौ (६) என்று குறிப்பிட்டிருப்பதாக அறிய வேண்டும். எனவே எல்லோருக்கும் சரணாகதி என்பது உண்டு என்பது ஸித்திக்கிறது.

அத்வைத ஸமயத்தில் சரணாகதி இரு விதம். ஒன்று, கிரியாரூபமானது. மற்றொன்று, ஞானரூபமானது. முதலாவது சரணாகதி, ஞானவடிவ சரணாகதி மூலமாக மோக்ஷ காரணமே தவிர நேராக இல்லை. பிரபத்தியும் சரணாகதியும் ஒன்றேயாகும். எனவே இந்த ஸ்தோத்திரத்தை அர்த்தம்

தெரிந்து பாராயணம் செய்யவேண்டியது என்பது அனை வருக்கும் அவசியம் என்பதற்காக ஸ்ரீ ஆசார்யர்கள் "எனது முகத்தில் இந்த ஷட்பதீ ஸ்தோத்திரம் நிரந்தரமாக வசிக்கட்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு முடிக்கிறார்.

பக்திரஸம் பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓடும் இந்த ஸ்தோத்திரத்தை நமக்கு அநுக்கிரகித்த ஸ்ரீ ஆசார்யர்களுக்கு வேறு கைம்மாறு செய்ய இயலாததால், அவர்களின் சரண கமலங்களில் மனப்பூர்வகமாகச் சரணாகதி செய்து கிருதஜ் ஞதையைத் தெரிவித்துக்கொள்வோமாக.

சுபம்

ஷட்பதீ ஸ்தோத்திரம்

முற்றும்

லிபர்ட்டி அச்சகம், சென்னை - 1

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின்
சில வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யர்களுடைய அநுக்ரஹ பூர்வமான ஸ்ரீமுகத்துடனும் கூடியது.

ரூ. நபை.

1. ஸ்ரீ பஜ கோவிந்தம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் அனுவாதமும் .... 0—50
2. ஸ்ரீ முகுந்தமாலா—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் உரையுடன் கூடியது. .... 0—50
3. ஸ்ரீ ப்ரச்னோத்தர ரத்னமாலிகா—ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இயற்றியது (தமிழ் லிபியில்) .... 0—25
4. ஸ்ரீ மூகபஞ்சசதீ—ஸம்ஸ்கிருத மூலமும் (தமிழுரையுடனும்) .... 2—00
5. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் இங்கிலீஷ் அனுவாதமும், ... 0—87
6. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்—தேவநாகரி, தமிழ் லிபிகளில் மூலமும், தமிழ் அனுவாதமும், ... 2—00
7. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளியும்—ஸம்ஸ்கிருதத்தில் .... 0—30
8. —ஷை—தமிழில் ச்லோகம், நாமாளியும் .... 0—25
9. ஸ்ரீசிவபாதாதி கேசாந்த வர்ணநம் முதலிய ஐந்து சிவ ஸ்தோத்ரங்கள்—ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரமும் தமிழ் அனுவாதமும் .... 0—87
10. விஷ்ணு பாதாதி கேசாந்தஸ்தோத்திரம்—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதங்களுடனும், ... 0—75
11. ஸ்ரீ சாந்தி விலாஸம்—ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரமும் தமிழ் அனுவாதமும் .... 0—75
12. மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி—ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் அனுவாதமும் .... 0—62
13. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்—ஸம்ஸ்கிருத ஸ்தோத்திரமும் தமிழ் ஆங்கில அனுவாதமும் .... 0—87
14. ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்ரம்—ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளின் மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது 1—75
15. ஸ்ரீ துர்கா சந்திரகலா ஸ்துதி—ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அருளியது .... 0—37
16. ஆத்மார்பண ஸ்துதி—ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் இயற்றியது. .... 0—75

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1